بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் *01/09/2023* அன்று ஜெர்மனியிலுள்ள *Messe Stuttgart* எனும் இடத்தில் அமைக்கப்பட்டிருந்த ஆண்டு மாநாட்டுத்திடலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது [அலை] அவர்களுடைய வழிகாட்டலின் ஒளியில் மாநாட்டில் கலந்து கொண்டவர்களுக்கு பொன்னான அறிவுரைகள்**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾

اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

அல்ஹம்துலில்லாஹ்! இன்று அஹ்மதிய்யா ஜமாஅத் ஜெர்மனியின் ஆண்டு மாநாடு மிக விரிவான அளவில் நடந்து கொண்டிருக்கிறது. மாநாட்டில் கலந்து கொண்ட அனைவரையும் மாநாட்டின் குறிக்கோளை பெறக்கூடியவர்களாக அல்லாஹ் ஆக்குவானாக! மாநாட்டை நடத்துவதன் மிகப்பெரும் நோக்கமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்குக் கூறியிருப்பது என்னவென்றால் - மிக வேதனையுடன் அன்னார் அதை வெளிப்படுத்தியும் உள்ளார்கள்; அது என்னவென்றால், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பைஅத்தில் இணையக்கூடியவர் மார்க்க அறிவை கற்றுக் கொள்ள வேண்டும்; ஆன்மீகத்தில் முன்னேற வேண்டும்; அல்லாஹ்வுடனான தொடர்பிலும், நேசத்திலும் முன்னேற வேண்டும்; பெருமானார் (ஸல்) அவர்களை முழுமையாக பின்பற்றக் கூடியவர்களாக இருக்க வேண்டும் என்பதாகும்.

**இவ்வருடம் ஜெர்மனியில் அஹ்மதிய்யா ஜமாஅத் நிலை பெற்று நூறு வருடங்களும் ஆகிவிட்டன.** ஆனால் இந்த விஷயத்திற்காக மகிழ்ச்சி அடைவதுடன், இந்த நூறு வருடங்களில் நாம் எதைப் பெற்றோம்; நாம் நமது ஈமானை எந்த அளவு பாதுகாத்தோம் என்பதையும் பார்க்க வேண்டும். நாம் நமக்குள்ளும், நமது சந்ததிகளுக்குள்ளும் இந்தத் தூய மாறுதலை உருவாக்க முயற்சி செய்துள்ளோம் என்றால் அதுவே உண்மையான நன்றி செலுத்துதலாக இருக்கும். இந்த நன்றி செலுத்துதலையே இந்த சந்தர்ப்பத்தின் போது நாம் மேற்கொள்ள வேண்டும்.

**இப்போது நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சில வழிகாட்டல்களை உங்களுக்கு முன்னால் எடுத்து வைக்கிறேன். அவை நமக்கு நமது குறிக்கோளின் பக்கம் வழிகாட்டக் கூடியவையாக இருக்கின்றன. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** பைஅத் செய்து விடுவதால் மட்டும் இறைவன் திருப்தி கொண்டு விடுவான் என்று கருதாதீர்கள்! (மாறாக) இது (மேல்)தோல் மட்டுமே ஆகும். சத்து அதற்கு உள்ளே உள்ளது. ஆகவே எவர் பைஅத் மற்றும் ஈமானுக்கான வாதம் செய்கிறாரோ அவர் தாம் தோல் ஆக

மட்டுமே இருக்கிறாரா அல்லது சத்து ஆக இருக்கிறாரா என்று மதிப்பீடு செய்து பார்க்க வேண்டும்.

**உலகை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குவது என்பது என்ன? இதை விளக்கியவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** முஸ்லிம்கள் சோம்பேறிகளாக ஆகிவிட வேண்டும் என்பது எனது கருத்து அல்ல! இஸ்லாம் எவரையும் சோம்பேறியாக ஆக்குவதில்லை! உங்களது வியாபாரங்களிலும் ஊழியங்களிலும் ஈடுபட்டிருங்கள். ஆனால் அவர்களிடத்தில் இறைவனுக்காக எந்த ஒரு நேரமும் எஞ்சி இருக்காமல் இருப்பதை நான் விரும்புவதில்லை. தொழுகைகளின் நேரத்தில் தொழுகைகளை விட்டு விடாதீர்கள்! எல்லா விவகாரங்களிலும் மார்க்கத்தை முன்னிலைப்படுத்துங்கள். உலகம் குறிக்கோளாக இருக்க வேண்டாம்; உண்மையான குறிக்கோளாக மார்க்கம் இருக்கட்டும்! பிறகு உலக வேலைகளும் மார்க்கமாகவே ஆகிவிடும்.

**அன்னார் (அலை) கூறுகிறார்கள்:** இறைவனை அடையாளம் கண்டு கொள்ளுங்கள்; அவன் மீது உயிருள்ள ஈமான் உருவாக வேண்டும். (இதுவே) முன்னேற்றத்திற்கு ஒரே வழியாகும்.

**எந்நிலையிலும் உலகை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்பதைக் குறித்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** ''பாருங்கள்! இருவகை மக்கள் உள்ளனர். ஒருவகை யாரென்றால், இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பிறகு உலக வியாபாரம் மற்றும் வணிகத்தில் மூழ்கி விடக் கூடியவர்கள். அவர்களின் தலைமீது ஷைத்தான் பயணம் செய்கின்றான். வியாபாரம் செய்வது தடை என்பது எனது கருத்து அல்ல! சஹாபிகள் வியாபாரமும் செய்து வந்தனர். ஆனால் உலகை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை கொடுத்து வந்தனர். அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட போது அவர்களின் உள்ளத்தை நம்பிக்கையால் நிரப்புகின்ற இஸ்லாத்தைப் பற்றிய உண்மையான அறிவைப் பெற்றார்கள். இதன் காரணமாகத்தான் அவர்கள் எந்தக் களத்திலும் ஷைத்தானுடைய தாக்குதலால் தடுமாற்றம் அடையவில்லை. இரண்டாவது வகையினர் யார் என்றால், மார்க்க முன்னேற்றத்திற்காக சிந்திப்பவர்களாக இருக்கின்றனர். இவர்கள் அல்லாஹ்வின் கூட்டத்தினர் என்று அழைக்கப்படுகின்றனர். இவர்கள் ஷைத்தான் மற்றும் ஷைத்தானுடைய படையை வெற்றி கொள்கின்றனர்.

எவர்கள் மார்க்க முன்னேற்றம் மற்றும் மார்க்க ஆர்வத்தை குறைத்துக் கொள்வதில்லையோ அவர்கள் மீது நான் அதிக எதிர்பார்ப்பு வைக்கிறேன். எவர்கள் இந்த ஆர்வத்தைக் குறைத்துக் கொள்கின்றனரோ அவர்கள் மீது ஷைத்தான் ஆதிக்கம் பெற்று விடக்கூடாதே என்ற அச்சம்தான் எனக்கு உள்ளது. ஆகவே ஒருபோதும் சோம்பேறித்தனத்தைக் காட்டக்கூடாது.''

**முஸ்லிம் அல்லாதவர்களுக்குத் திருக்குர்ஆனை எரிப்பதற்கு துணிவு எவ்வாறு பிறந்தது? ஏனென்றால், நாம் செயல் ரீதியாக திருக்குர்ஆனுடைய போதனைப்படி அமல் செய்வதை விட்டு விட்டோம். இதன் காரணமாகத்தான் அவர்களுக்குத் துணிவு பிறந்தது.** எவர் அறிவில் முன்னேற விரும்புகிறாரோ அவர் திருக்குர்ஆனைக் கருத்தூன்றி படிக்க வேண்டும். எங்கு புரியவில்லையோ அங்கு கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும். திருக்குர்ஆன் ஒரு மார்க்கக்

கடலாகும். அதன் அடியாழத்தில் பெரும் பெரும் விலை மதிப்புமிகுந்த அரிதான இரத்தினங்கள் கிடக்கின்றன. எத்தனை பேர் சிந்தித்து திருக்குர்ஆனை ஓதுகிறார்கள் என்றும் பிறகு அதன்படி அமல் செய்வதற்கு முயற்சி செய்கிறார்கள் என்றும் நாம் நம்மை ஆய்வு செய்து பார்க்க வேண்டும்.

உண்மையான மார்க்கத்தின் வேர் இறை நம்பிக்கையாகும். இறை நம்பிக்கை எதை எதிர்பார்க்கிறது என்றால், உண்மையான முறையில் தூய்மையை மேற்கொள்ள வேண்டும் எனவும், இறையச்சம் இருக்க வேண்டும் எனவும் எதிர்பார்க்கிறது. இறையச்சம் கொண்டவரை இறைவன் ஒருபோதும் வீணாக்க மாட்டான். வானத்திலிருந்து அவன் அவருக்கு உதவி செய்வான். அவருக்கு உதவி செய்வதற்காக வானவர்கள் இறங்குவார்கள். இறையச்சம் கொண்டவரிடமிருந்து அற்புதங்கள் வெளிப்படுகின்றன; இதைவிட வேறு என்ன வேண்டும்.

தமக்குள் ஓர் உண்மையின் ஆன்மாவை கொண்டுள்ள தொழுகை தீமைகளை நீக்குகின்றது. அருளின் அடையாளங்கள் அதனுள் இருக்கின்றது. அந்தத் தொழுகை நிச்சயமாக தீமைகளை நீக்குகின்றது. தமக்குள் ஓர் இன்பத்தையும் சுவையையும் வைத்துள்ள தொழுகையின் சத்தும் ஆன்மாவும் துஆவாகும்.

நாம் தொழுகைகளில் இன்பத்தைப் பெறுகிறோமா, நாம் காரணிகள் மீது மட்டுமே முழுமையான நம்பிக்கையை வைக்கின்றோமா என்று நாம் நம்மை ஆய்வு செய்து பார்க்க வேண்டிய தேவை உள்ளது. நாம் தொழுகைகளைப் பாதுகாக்கக் கூடியவர்கள் என்றால், நாம் பைஅத்துடைய உரிமையையும் செலுத்தக்கூடியவர்களாக இருப்போம். இல்லை என்றால் நமது நிலை கவலைக்குரியதாக உள்ளது என்றே பொருள்.

**அறிவு மற்றும் ஞானத்தில் முன்னேறுவது பற்றியும் வழிகாட்டிக்கும், பின்பற்றக் கூடியவருக்கும் உள்ள தொடர்புகள் பற்றியும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** வழிகாட்டிக்கும் பின்பற்றக் கூடியவருக்கும் உள்ள தொடர்பை, ஆசிரியருக்கும் மாணவருக்கும் உள்ள உதாரணத்தைக் கொண்டு புரிந்து கொள்ள வேண்டும். ஆசிரியரிடமிருந்து மாணவர் பயன்பெறுவது போன்று பின்பற்றக் கூடியவரும் தம் வழிகாட்டியிடமிருந்து பயன்பெறுகிறார். மாணவர் (தன்) ஆசிரியருடன் தொடர்பு கொண்டுள்ளார்தான்! ஆனால் தன் கல்வியில் பாதத்தை முன்னெடுத்து வைக்கவில்லை என்றால் பயன்பெற இயலாது. இதே நிலைதான் பின்பற்றக் கூடியவருக்கும் ஆகும். ஆகவே இவ்விஷயத்தில் தொடர்பை உருவாக்கிக் கொண்டு தம் ஞானத்தையும் அறிவையும் அதிகரிக்க வேண்டும். உண்மையைத் தேடக்கூடியவர் ஓரிடத்தை அடைந்து விட்டு ஒருபோதும் நின்று விடக்கூடாது. இல்லை எனில், சபிக்கப்பட்ட ஷைத்தான் அவரை வேறு பக்கம் திசை திருப்பி விடலாம்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** என்னிடம் பைஅத் செய்துள்ளீர்கள் என்றால், என்னை நீதி நெறி தீர்ப்பவராக ஒப்புக் கொள்ளுங்கள்! எந்த விஷயத்தை நான் கூறுவேனோ அது இறைவன் மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தூதர் (ஸல்) அவர்களின் போதனைக்கு ஏற்ப கூறுவேன் என நம்பிக்கை வையுங்கள்.

**அன்னார் (அலை) கூறுகிறார்கள்:** "எவர்கள் என்னை மறுத்தார்களோ, என் மீது ஆட்சேபனை செய்கிறார்களோ அவர்கள் என்னை அடையாளம் கண்டு கொள்ளவில்லை. எவர் என்னை ஏற்றுக் கொண்ட பிறகு ஆட்சேபனை செய்கிறாரோ அவர் இன்னும் பாக்கியமற்றவராவார். (ஏனெனில்) அவர் அடையாளம் கண்டு கொண்ட பிறகு குருடராகிவிட்டார்."

**தமது வருகையின் நோக்கம் மற்றும் குறிக்கோள் பற்றி எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** "எனது வருகையின் உண்மையான நோக்கமும் குறிக்கோளும் என்னவென்றால் ஏகத்துவம், நல்லொழுக்கம் மற்றும் ஆன்மீகம் ஆகியவற்றைப் பரப்ப வேண்டும் என்பதேயாகும். ஏகத்துவம் என்பது இறைவனை மட்டுமே தனது இலக்காகவும், குறிக்கோளாகவும், விருப்பத்திற்குரியவனாகவும், பின்பற்ற தகுந்தவனாகவும் உறுதி கொள்வதாகும்.

நல்லொழுக்கம் என்பது, மனிதன் எந்த அளவு ஆற்றல்களைக் கொண்டு வந்தானோ அவற்றை இடம், சந்தர்ப்பத்திற்கு ஏற்ப செலவழிக்க வேண்டும் என்பதாகும். சிலவற்றை முற்றிலும் பயனற்றவையாக விட்டுவிட்டு சிலவற்றின் மீது அதிக அழுத்தம் கொடுப்பது கிடையாது! ஆன்மீகம் என்பது, இறைவனுடன் உண்மையான தொடர்பு ஏற்படுவதால் உருவாகும் தடயங்களும், அடையாளங்களும் ஆகும்."

ஆகவே ஒவ்வோர் அஹ்மதியும் இதன் மீது கவனம் செலுத்த வேண்டிய தேவை உள்ளது. அவருடைய உள்ளத்தில் ஏகத்துவம் பற்றி எந்த அளவு அழுத்தம் உள்ளது; ஆர்வம் உள்ளது என்று சிந்திக்க வேண்டிய தேவை உள்ளது. இதேபோன்று நாம் பள்ளிவாசல்களைக் கட்டுகிறோம் என்றால், அதை நிரப்புகின்ற கவலையும் நமக்கு இருக்க வேண்டும்.

இதேபோன்று, உயரிய நல்லொழுக்கங்கள் ஒவ்வோர் அஹ்மதியிடமிருந்தும் வெளிப்பட வேண்டும். இந்த உயரிய நல்லொழுக்கங்கள் நம் தூது செய்தியைக் கொண்டு சேர்ப்பதில் பெரும் பங்களிப்பை அளிக்க இயலும்!

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** "அல்லாஹ்வின் உரிமைகள் மற்றும் அடியார்களின் உரிமைகள் ஆகியவை செலுத்தப்படுவதில் உயரிய தரம் நிலைநாட்டப்படும் போதுதான் ஆன்மீகத்தின் தரம் தெரிய முடியும்."

இறைவனுடன் நமக்கு உறுதியான தொடர்பு ஏற்பட்டு விட்டதா? நம்முடைய தொழுகைகளின் உயரிய தரம் நிலைநாட்டப்பட்டு விட்டதா? தொழுகைக்கான நேரத்தில் உலக வேலைகளை விட்டு விட்டு நாம் தொழுகைக்காக ஆஜராகி விடுகிறோமா அல்லது பள்ளிவாசல்களைக் கட்டுவதில் மட்டும் அழுத்தம் கொடுத்து வருகிறோமா? திருக்குர்ஆனை ஓதுவதை நாம் முறையாக பேணி வருகிறோமா? திருக்குர்ஆனின் கட்டளைகளைத் தேடிப் பார்த்து அதன்படி செயலாற்ற முயற்சி செய்கிறோமா? நம் பிள்ளைகளை மார்க்கத்துடன் இணைக்க முழுமையாக நாம் முயற்சி செய்கிறோமா? நம்முடைய பிள்ளைகளின் உலக கல்வி பற்றி மட்டுமே நமக்குக் கவலை உள்ளதா அல்லது அவர்களின் மார்க்கம் குறித்தும் கவலை உள்ளதா? நல்லடியார்கள் பரஸ்பரம் கருணை உடையவர்களாக இருப்பார்கள் என்பதற்கேற்ப நமது உயரிய ஒழுக்கங்கள் பரஸ்பர தொடர்புகளில்

அந்தத் தரத்தை பெற்று விட்டனவா? அந்தக் காட்சிகளைக் காட்டக் கூடியவர்களாக நாம் உள்ளோமா? உயரிய ஒழுக்கத்தின் முன்மாதிரிகளை அந்நியர்கள் மீது வெளிப்படுத்தி அவர்களுக்கு இஸ்லாத்தின் அழகிய போதனையைக் குறித்து நாம் தெரிவிக்கிறோமா அல்லது உயரிய ஒழுக்கத்தை வெளிப்படுத்திவிட்டு நாங்கள் அமைதியை விரும்புவர்கள் என்று மட்டும் நாம் கூறுகிறோமா? (என்று பார்க்க வேண்டும்.)

உலகின் உள்ளத்தை ஜெயிக்க வேண்டும் என்றும், இறைவனின் ஏகத்துவத்தை உலகை ஒப்புக்கொள்ள செய்ய வேண்டும் என்றும், பெருமானார் (ஸல்) அவர்களின் பாதங்களில் உலகைக்கொண்டு வருவோம் என்றும் வாதித்து உறுதி கொண்டவாறு நாம் எழுந்துள்ளோம். ஆக இவ்வகையில் நம்மில் ஒவ்வொருவரும் தம்மை ஆய்வு செய்ய வேண்டிய தேவை உள்ளது. நாம் உலகை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை அளித்தவாறு இந்தக் குறிக்கோளை அடைய முழுமையாக முயற்சி செய்வோம் என்றும், நம் பிள்ளைகளுக்கும் சந்ததிகளுக்கும் இந்த அறிவுரையை வலியுறுத்திக் கொண்டே இருப்போம் என்றும், சந்ததிகளுக்கு எவ்வாறான தர்பிய்யத்தை வழங்குவோம் என்றால் அல்லாஹ்வுடனான தொடர்பின் இந்த விழிப்புணர்வு ஒரு தலைமுறையில் இருந்து இன்னொரு தலைமுறை வரை தொடர்ந்து கொண்டே செல்லட்டும் என்றும் ஒரு புதிய உறுதியுடன் நாம் புதிய நூற்றாண்டில் நுழைய வேண்டும்.

அல்லாஹ் நமக்கு இதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக. ஆமீன்!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)